## இலங்கை மாநாட்டுப் பணியகம் - 2017

---

இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பணியகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பணியகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்யணிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை மாநாட்டுப் பணியகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட மோட்டார் வாகனத்திற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 3,158,500 தொகை அந்தக் கணக்கிலிருந்து அகற்றப்படாதிருந்ததுடன் மீள் மதிப்பீட்டு நட்டமாக ரூபா 158,500 தொகை விரிவான வருமானக் கூற்றில் வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டின் மிகை ரூபா 158,500 இனாலும், மீள் மதிப்பீட்டு நட்டம் ரூபா 3,000,000 இனாலும் குறைத்தும் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு ஒதுக்கம் ரூபா 3,158,500 தொகை அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்காக கிடைத்த நிலையான வைப்பு வட்டி ரூபா 1,249,988 தொகை நிறுத்தி வைத்தல் இலாபத்தில் சீராக்குவதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் வட்டி வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

ரூபா 6,390,756 கிரயத்தையுடைய அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பொருத்திகளும் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு மற்றும் பௌதீக மெய்மையாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமரப்பிக்கப்படவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பணியகத்தின் நிதி விளைவுகள் ரூபா 69,511,190 மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 30,895,865 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 38,615,325 தொகையினால் வளர்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது வர்த்தகச் செலவுகள் ரூபா 23,349,194 இனால் குறைவடைந்தமை மற்றும் வருமானம் ரூபா 15,984,164 தொகையினால் அதிகரித்திருந்தமை என்பன மேற்கூறிய நிதி விளைவுகளின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டின் போது ரூபா 60,811,425 தொகையான மிகை 2016 ஆண்டு வரையில் ரூபா 30,895,865 தொகை வீழ்ச்சியடைந்திருந்ததுடன் மீண்டும் 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 69,511,190 வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்த போது 2013 ஆண்டில் ரூபா 71,320,070 தொகையான பணியகத்தின் பங்களிப்பு 2016 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 44,697,026 தொகை வரை தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2017 ஆம் ஆண்டின் போது மீண்டும் ரூபா 81,471,882 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இலக்கிடப்பட்ட செயற்பாடுகளை உள்ளடக்கி வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்ததுடன் சுற்றறிக்கையின் (இ) உபபிரிவின் பிரகாரம் உரிய ஆண்டின் பாதீட்டை அடிப்படையாகக் கொண்டு முன்னுரிமையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டம், (Activity Plan), அமுல்படுத்தும் காலப்பகுதி (Time Line) மற்றும் அந்த செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி / விளைவு (Output / Outcome) அதில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், பணியகத்தால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் அதன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகள் ஆண்டின் போது அடையப்பட்டதா என உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் போதியளவான தகவல்களை உள்ளடக்கி செயலாற்றல் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 இன் 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை அதிகாரச்சட்டத்தின் 42(2) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்ற முடியாதிருந்தது.

(i) சர்வதேச, வலயம் சார் மற்றும் உள்நாட்டு மாநாடுகள், கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடாத்தும் இடம் ஒன்றாக மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய பிரயாண முடிவு எல்லை ஒன்றாக இலங்கையை ஒருங்கிணைந்தலுடனும் ஒத்துழைப்புடனும் அபிவிருத்தி செய்தல் மற்றும் சுற்றுலாத்துறை சந்தையில் இலங்கை தொடர்பாக சந்தைப்படுத்தல் விவகாரங்களை மேற்கொள்வதற்காக பொறுப்பு ஏற்பதற்காக திட்டமிடப்பட்ட பொதுக் கொள்கையொன்றினை ஏற்படுத்துதல்.

(ii) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலா பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கு மற்றும் அமைப்புகளுக்கு தொழில்சார் நியமங்களை தீர்மானித்தல் மற்றும் அந்த நியமங்களை பேணுவதை வலுப்படுத்தல்.

(iii) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்கள் தொடர்பாக பல்வேறு துறைகளில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு தொகுதிகளில் நபர்களின் அல்லது அமைப்புக்களின் தொழில்சார் திறன்களை அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தல்.

(iv) மாநாடுகள், கூட்டங்கள், கண்காட்சிகள் மற்றும் தூண்டுதல் அளிக்கும் சிறிய சுற்றுலாப் பயணங்களை அபிவிருத்தி செய்யும் மற்றும் மேம்படுத்துவதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் கம்பனிகள் அல்லது அமைப்புக்களுடன் இணைதல், அவற்றில் அங்கத்துவத்தை பெறல் அல்லது அந்த ஏதேனும் சங்கங்கள் அல்லது அமைப்புக்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளல்.

(v) இலங்கையைப் போலவே வெளிநாடுகளிலும் இலங்கை சுற்றுலா மற்றும் சுற்றுப் பிரயாண சேரிடம் ஒன்றாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல் மற்றும் சுற்றுலாச் சந்தையில் சந்தைப்படுத்துவதற்கான பணியகத்தில் வழிகாட்டல் வழங்குதல்.

(vi) உபசரிப்பு சேவை உட்பட போதியளவான, ஈர்க்கக்கூடிய மற்றும் செயற்திறனுள்ள சுற்றுலா சேவையை, இடையறாமல் நடத்தக் கூடிய விதமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்தல்.

(ஆ) வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 09 பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 312.45 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது ரூபா 84.45 மில்லியன் அதாவது 27 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த செயற்பாடுகளின் கீழ் 128 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 84 செயற்திட்டங்கள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

2017 செப்தெம்பர் மாதம் 21 மற்றும் 22 ஆந் திகதிகளில் ரூபா 7,005,069 செலவினத்தைச் செய்து நடாத்தப்பட்ட IMEX TRADE FAIR மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பங்குபற்றிய உள்நாட்டு பிரதிநிதிகளால் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் நிலையம் அமைக்கப்பட்ட கொட்டகைக்காக நான்கு பேர்கள் மாத்திரம் சமூகமளித்தமையும், முதலீட்டு விளைவுகள் பூச்சியமாக இருந்தமையும், மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் முழுமையாக தோல்வியடைந்தமையும், அவர்களின் பின்தொடர் அறிக்கைகளின் கருத்துரைகளின் கீழ் பணியகத்திற்குக் அறிவிக்கப்பட்டமையின் காரணமாக அந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்ததா என்பது தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தது.

**4.3 நிதியத்தின் குறை பயன்பாடு**

மீளாய்வாண்டின் போது நிதிய முகாமைத்துவக் கணக்கில் ரூபா 137,737,994 தொகையான சராசரி காசு மீதியொன்று காணப்பட்ட போதிலும் அந்தப் பணத்தை ஆக்கபூர்வமான முதலீடொன்றில் ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவத்தால் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தரொருவர் பொது முகாமையாளர் பதவிக்காக ஆட்சேர்க்கப்பட்டு 2016 திசெம்பர் முதல் 2017 சனவரி வரையான காலத்திற்காக சம்பளம் மற்றும் படியாக ரூபா 483,372 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டின் பெப்ரவரி முதல் திசெம்பர் 31 வரை அந்தப் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் முகாமைத்துவ பரிசோதனை மற்றும் அபிவிருத்திப் பதவிகளும் 03 வருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டன.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளுதல்**

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் கொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு ''2030 இன் நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் சகல அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் பணியகத்தால் புதிய விடயப்பரப்பின் கீழ் வருகின்ற பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக அறிவித்திருந்த போதிலும், நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் இலக்கை அடைய வேண்டிய கட்டங்களும் இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டமையை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 உள்ளகக் கணக்காய்வு**

பணியகத்தின் உள்ளகக் கணக்காய்வு விடயங்களுக்காக உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று நிறுவப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல்கள் வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் மூலமேனும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பபட்டிருக்கவில்லை.

**6.2 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 சனவரி 25 ஆம் திகதிய அரசாங்க பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான பெறுகைகள் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்களுக்குரிய கொட்டகை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,732,588 செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதும், பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.1 இன் பிரிவின் பிரகாரம் முறையாகத் தயாரிக்கப்பட்ட ஏேள்வி ஆவணங்கள் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் கேள்வி ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மீளாய்வு செய்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 2006 பெறுகை கைநூலின் மேலதிகம் இன் 2.14.1 இன் பிரகாரம் கேள்வி கோரல் மற்றும் கேள்வி கோரும் முறைமைக்காக திணைக்கள பெறுகைக் குழுவின் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.7.1 இன் பிரகாரம் முறையாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கடிதமும் அவதானிக்கப்படவில்லை.

**6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் போது பாதீட்டிற்கும் உள்ளவாறான எண்ணிக்கைக்கும் இடையே 25 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டிராமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**6.4 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய பணியகத்தின் ஆண்டறிக்கை 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது பணியகத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டிற்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையிலான முரண்களை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) வெளிநாட்டு மேம்பாட்டிற்காக பங்குபற்றிய உள்நாட்டு முகவர்களின் பின்தொடர் அறிக்கை பெறப்படாமை.<br>(ii) மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியின் போது பங்குபற்றிய உத்தியோகத்தர்களிடமிருந்து முன்னேற்ற அறிக்கை பெறப்படாமை. (Satisfaction Report) |